# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2056, - அக்டோபர் 11, 2025 Weekly E-paper • October 11, 2025



# மீசைத் திமிர்!

சுப. வீரபாண்டியன்

## காசாவில் மரண ஓலம்! உலகநாடுகளே ஒன்றுசேருங்கள்!!

எழில்.இளங்கோவன்

## இலவு காக்கும் கிளிகள்

தலையங்கம்

## இயக்கச் செய்திகள்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2056, - அக்டோபர் 11, 2025 Weekly E-paper • October 11, 2025



# மீசைத் திமிர்!

சுப. வீரபாண்டியன்

மன மகிழ்ச்சிக்காகத்தான் பல நேரங்களில் நாம் திரைப்படங்களுக்கும், நாடகங்களுக்கும் செல்கிறோம்! ஆனால் அழுதபடியே ஒரு மேடை நாடகத்தைச் சென்ற வாரம் நான் கோவையில் பார்த்தேன் !

நான் மட்டுமில்லை, என்னோடு அந்த அரங்கில் அமர்ந்து நாடகம் பார்த்த பலர், அழுத கண்களோடுதான் அந்த நாடகத்தின் இறுதிக் காட்சிகளைப் பார்த்தனர் என்பது மிகை அன்று, உண்மை!

எழுத்தாளர் இமையத்தின் பெத்தவன் என்னும் குறுநாவலை கோவையில் உள்ள சங்கமம் குழுவினர், ஓவியர் ஏ.ஜே.செல்வின் இயக்கத்தில், "மீசைத் திமிர்" என்னும் பெயரில் நாடகமாக நடத்தினர் ! என்னையும், வழக்கறிஞர் தோழர் ப.பா.மோகன் அவர்களையும், நாடகம் பற்றிக் கருத்துரைக்க அழைத்திருந்தார்கள்!




ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்பே, அந்தப் பெத்தவன் நூலை நான் படித்திருக்கிறேன். ஆனாலும் அந்த நாடகம் பார்க்கும்போது, என்னால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை!

சாதி மறுப்புத் திருமணம் செய்து கொள்ள விரும்பும் ஒரு பெண்ணையும், ஆணையும் ஆணவக் கொலை செய்ய முயற்சி செய்யும் கதைதான் அது! பெற்றவர்களே தங்கள் மகளை விஷம் கொடுத்துக் கொன்று விட வேண்டும் என்று சாதிச்சங்கம் ஆணையிடுகிறது! பிள்ளையைக் கொல்லவும் மனம் இல்லாமல், சாதிக் கட்டமைப்பை மீறவும் துணி வில்லாமல், அந்தப் பெற்றோர், அந்தக் குடும்பம் ஆற்றாது அழும் கண்ணீர்தான் அந்த நாடகம் !

நம் நாட்டில் ஒவ்வொரு சாதியும், ஒரு குடியரசைப் போல இருக்கிறது! அதற்கு ஒரு குடியரசுத் தலைவரும், எழுதப்படாத சட்டங்களும் இருக்கின்றன! இங்கு ஒருவரின் பெயரில் தொடங்கி, அவருடைய நடை, உடை, பாவனை என ஒவ்வொரு அசைவையும் சாதிதான் தீர்மானிக்கிறது! அந்த சாதித் திமிர்தான், இங்கே மீசைத் திமிராய்க் காட்டப்பட்டிருக்கிறது!




தோழர் இமையத்தின் கதைக்கு, இயக்குனர் செல்வின் மிகப்பெரிய நியாயத்தைச் செய்திருக்கிறார்! அந்த மேடையில் நடித்த ஒரு சிறுவன் உள்ளிட்ட, நடிகர்கள் அனைவரும் தங்கள் நடிப்பால் நம் நெஞ்சத்தைப் பிழிகின்றனர்!

தமிழ்நாட்டின் ஒவ்வொரு ஊரிலும், இந்த நாடகம் நடத்தப்பட வேண்டும்! சாதி எதிர்ப்பு உணர்வை, ஒரு பெரும் நெருப்பாய் ஒவ்வொருவரும் ஏந்திப் பிடிக்க வேண்டும்!

இது வெறும் நாடகமன்று, சாதிக்கு எதிரான பெரும் ஆயுதம்!

# காசாவில் மரண ஓலம்! உலகநாடுகளே ஒன்றுசேருங்கள்!!

எழில்.இளங்கோவன்



கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய அமெரிக்க நட்பு நாடுகள் பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பதாக அறிவித்தவுடன், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு "ஜோர்டான் நதிக்கு மேற்கே பாலஸ்தீனம் என்ற நாடே இருக்காது" என்று ஆணவத்தோடு பேசியிருக்கிறார்.

சொந்த நாடே இல்லாத யூதர்கள் மத்திய கிழக்கு நாடுகள், வட ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆசிய நாடுகள் என உலகின் பல நாடுகளில் குடியேறினார்கள்.அப்படி எகிப்தில் குடியேறிய யூதர்களால் ஏற்பட்ட உள்நாட்டுப் பிரச்சனையால் அன்றைய எகிப்திய மன்னன் பார்வோன் எகிப்தின் அடிமைகளாய் நடத்தினான் யூதர்களை. கடவுளின் வழிகாட்டுதலில் அங்கிருந்து யூதர்களை மீட்டு செங்கடலைக் கடந்து, பாலைவனங்களைக் கடந்து 'கானான்' நாட்டில் அவர்களைத் தங்கவைத்தான் மோசே என்று பைபிள் பழைய ஏற்பாடு சொல்கிறது. கானோன் நாடு என்றால் எது? இன்றைய பாலஸ்தீனம், இஸ்ரேல், லெபனான், சிரியா ஆகிய நிலப் பகுதிகள்தான் அன்றைய கானோன் நாடு. ஆக, பாலஸ்தீனம் - இஸ்ரேலின் தொடக்கப் புள்ளியை பைபிள் சொல்லிவிட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் 'வெர்சாய்ஸ் உடன்படிக்கை' யின் மூலம் 1920 ஆம் ஆண்டு நிறுவப் பட்ட, ஐக்கிய நாடுகள் அவைக்கு முன்னோடியாக இருந்த 'லீக் ஆஃ நேஷன்ஸ்' ஆணையின் மூலம் 1922 முதல் 1948 ஆம் ஆண்டு வரை பிரிட்டனின் பொறுப்பில் பாலஸ்தீனம் வந்தது.

பாலஸ்தீனத்திற்குள் (இன்றைய இஸ்ரேல்) அகதிகளாக, ஒண்டவந்தவர்களான யூதர்கள் 'சியோனிஸ்ட் ஃபண்ட்' என்ற ஒரு நிதியத்தை 1901 ஆம் ஆண்டு நிறுவினார்கள். அதன் உண்மையான பெயர் "யூத தேசிய நிதியம்" (Jewish National Fund). சியோனிசம் என்றால் யூதர்களுக்கான நாடு, அந்நாட்டின் நிலங்கள் யூதர் வசமாக்குதல், அனைத்தும் யூத மயம், யூதநலத்தைக் கட்டமைப்பதற்கான நிறுவனம். அதன் ஒரு பிரிவுதான் சியோனிஸ்ட் ஃபண்ட் என்று அழைக்கப்பட்ட யூத தேசிய நிதியம். இந்நிதியத்தின் மூலம் உலக யூத மக்களிடம் இருந்து பெறப்பட்ட நிதிகளினால் பாலஸ்தீனத்தின் நிலங்கள் பெரும்பகுதிகளை யூதர்கள் கைபற்றினார்கள். அதாவது "ஒண்டவந்த பிடாரி, ஊர்ப் பிடாரியை விரட்டியது போல" என்பார்களே, அப்படி யூதர்களால் பாலஸ்தீனிய மண்ணில் இருந்து பாலஸ்தீன்யர்கள் விரட்டப்பட்டார்கள். அங்கிருந்து யூத-பாலஸ்தீன மோதல்கள் தொடர்ந்தன. இந்த நிலையில்தான் பிரிட்டனின் பொறுப்பில் பாலஸ்தீனம் வந்தது.

ஆனாலும் பாலஸ்தீன - யூதர்களின் கடும் மோதல்களைச் சரிசெய்ய முடியாமல் பிரிட்டன் 1948 ஆம் ஆண்டு பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறியது. உடனே யூதர்கள் அமெரிக்காவின் உதவியுடன் அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதியை 'இஸ்ரேல்' என்று அறிவித்து, ஐ.நா. வின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டனர். தொடர்ந்து யாசர் அராஃபாத்தின் 'பாலஸ்தீன விடுதலை இயக்கம்' தொடங்கி இன்றைய 'ஹமாஸ்' போராளிகள் வரையிலான பாலஸ்தீன விடுதலைப்போர் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

இப்போது சில ஆண்டுகளாக, பாலஸ்தீன ஹமாஸ்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## இலவு காக்கும் கிளிகள்

குளத்து நீரில் தாமரை இருந்தாலும், தாமரை இலையில் மேல் தண்ணீர் ஒட்டாது. எடப்பாடியுடன் அமித்ஷா இருந்தாலும்,

அதிமுக தொண்டர்களின் வாக்குகள் தாமரைக்குக் கிடைக்காது. இது அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

அதனால்தான் நாமக்கல், குமாரபாளையத்தில் பரப்புரைசெய்யும்போது "அங்கபாருங்ககொடிபறக்குது (தவெக கொடியைச் சுட்டிக்காட்டி), பிள்ளையார் சுழி போட்டாச்சு..." என்று விஜய்க்கு வலைவீசுகிறார், எடப்பாடி பழனிச்சாமி.

கரூர் நிகழ்வை ஒட்டி விஜய் கைது செய்யப்பட்டால், அரசியல் பண்பற்ற ரசிகக் கூட்டம் மூலம் ஒரு போராட்டக்கலகம்ஏற்படும்,சட்டம்ஒழுங்குபிரச்சனை ஏற்படும். அதை வைத்து 'ஆட்சியில்' குளிர்காயலாம் என்றிருந்தவர்களை, இலவு காத்த கிளிகளாக்கி விட்டார் நம்முதல்வர் ஸ்டாலின் அவர்கள், தேர்ந்த தன் நிதானமான நடவடிக்கையால்.

டில்லியில் இருந்து அமித்ஷா திரைமறைவிலும், குமாரபாளையத்தில் இருந்து எடப்பாடியும் 'சிக்னல்' கொடுக்கிறார்கள், கூட்டணிக்காக.

பத்து நாட்களாக பனையூர் பங்களாயைவிட்டு விஜய் வெளியேதலைகாட்டவில்லை.இரண்டாம்கட்டபுஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் தலைமறைவு. கரூர் மாவட்டச்செயலாளர்கள் கைது. கையறுநிலையில் விஜய். அவரை வைத்து அரசியலில் விளையாடப்



பார்க்கிறது தாமரையும், இலையும். இவைகளை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

தெளிவான கொள்கை, நிதானமான அணுகுமுறை, உறுதியான மக்கள்நலப்பணிகள், மக்களை நாளும் சந்தித்து நேர்மையான ஆட்சியைத் தருகின்ற நம்கழக ஆட்சியின் முதல்வரையும் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் மக்கள், உதயசூரியனுக்கு ஆதரவாக.

கரடியாகக் கத்தினாலும் தாமரையும், இலையும் வாடிவிடும், தவிர்க்க முடியாது.

அமைதியாக எழும் உதயசூரியனைத் தடுக்கவும் முடியாது!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

அமைப்பை முற்றாக அழிப்போம் என்று சொல்லிக் கொண்டு உண்மையில் பாலஸ்தீனத்தின் காசா நகர வீடுகள், மருத்துவமனைகள், மக்கள், குழந்தைகள், பெண்கள், வயதான பெரியவர்கள் மீது நேரடியாகக் குண்டுகளை வீசி ஒரு பெரும் இனப்படுகொலையை நடத்திக் கொண்டிருக்கிறார் இஸ்ரேலின் பிரதமர் நெதன்யாகு. இஸ்ரேல்-பாலஸ்தீனப்போரை நிறுத்த முயல்வதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் சொல்வது நாடகமாகும். இஸ்ரேலுக்கு எதிரான அல்லது பாலஸ்தீனத்திற்கு ஆதரவான தீர்மானம் வரும்போது அதை அமெரிக்கா தன் 'வீட்டோ' அதிகாரத்தால் ரத்து செய்துவிடுகிறது.

காசா இனப்படுகொலைக்கு, அமெரிக்கா இஸ்ரேலுக்கு வழங்கும் பல பில்லியன் டாலர் ஆயுதங்களைப் பயன்படுத்துவதாலும், என்றும் இஸ்ரேலுக்கே துணையிருப்பேன் என்று சொல்லும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பும், இனப்படுகொலையைக் கூச்சமின்றி செய்துகொண்டிருக்கும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு இருவருமே குற்றவாளிகள். இஸ்ரேலுக்கே துணை செய்வோம் என்று சொல்லும் ட்ரம்ப்பின், இஸ்ரேல்- ஹமாஸ் சமரசம் எப்படி முடியும் என்று தெரியவில்லை.

காசாவைக் காப்பாற்ற, காசா மக்களைக் காப்பாற்ற, பாலஸ்தீனம் தனிநாடாக உருவாக - உலக நாடுகளே ஒன்றுசேருங்கள்!

# பேரவையில் இணைந்த 100 தோழர்கள்







பேரவையின் சார்பில் 04.10.2025 அன்று பழனியில் துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராம. வைரமுத்து தலைமையில் தோழர்கள் ஞானசேகர், ஜெயராம், தமிழினியன், மாக்சிம் கார்க்கி ராஜா முன்னிலையில் கருத்தரங்கம் நடைபெற்றது. 'கலையும் அரசியலும்' என்ற தலைப்பில் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்களும் 'வாளும் கேடயமும்' என்ற தலைப்பில் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ் அவர்களும் உரையாற்றினர். கொள்கை பரப்புச் செயலாளர் கி.இரவிச்சந்திரன் மற்றும் மாவட்டச் செயலாளர் ப.புலேந்திரன் வாழ்த்துரை வழங்கினர். தோழர் மருதமூர்த்தி நோக்கவுரை ஆற்றினார். மாவட்டத் தலைவர் தமிழ் முத்து வரவேற்றார். தோழர் ம.ஆதி நன்றி கூறினார். இந்நிகழ்வின் போது, தோழர் மருதமூர்த்தி தலைமையில் 100 தோழர்கள் பேரவையில் தங்களை இணைத்துக் கொண்டனர்

## மதுரை: நூல் அறிமுகம்



மதுரை மாவட்டத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை மற்றும் இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் சார்பில் நூல் அறிமுக கூட்டம் 03.10.2025 அன்று துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராம.வைரமுத்து தலைமையில் நடைபெற்றது. பேரவையின் தலைவர் சுப. வீரபாண்டியன் அவர்கள் எழுதிய 'நீங்கள் எந்தப் பக்கம்' நூல் குறித்து மாவட்ட துணைத் தலைவர் பேராசிரியை சாந்தி, 'இடைவேளை' நூல் குறித்துத் தி.க தலைமைக் கழக சொற்பொழிவாளர் வேங்கை மாறன் ஆகியோர் உரையாற்றினர். மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் பி.அமர்நாத் வரவேற்றார். மாவட்டத் தலைவர் மருத்துவர் மோ.சந்திரன் நன்றி கூறினார்.



பேரவைத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர், திருப்பூர் மாவட்டத் தோழர்களை சந்தித்தித்தார்கள். திருப்பூர் தோழர்கள் மூலமாக 293 திராவிட முழக்கம் ஆண்டுக் கட்டணம் பெறப்பட்ட மகிழ்ச்சியில் இந்தச் சந்திப்பு திருப்பூரில் நடைபெற்றது.

## மதுரை சி.வீரகணேசன் மறைவு



திராவிடஇயக்கத்தமிழர்பேரவையின்மதுரை புறநகர் மாவட்ட மேனாள் தலைவரும், தி.மு.க கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளருமான சி.வீர கணேசன் 07.10.2025 அன்று மறைவெய்தினார். அவரின் இறுதி நிகழ்வில் துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராம.வைரமுத்து தலைமையில் பேரவைத் தோழர்கள் கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினர்.

பேரவையின் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், துணைத் தலைவர்கள் உள்ளிட்டத் தலைமைப் பொறுப்பாளர்கள் பேரவையின் சார்பாக இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian**